விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 147 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 01 திங்கட்கிழமை (15.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## தீர்வைப் பெறுவதே இலக்கு வாய்ப்பை சரியாகக் கையாள்வோம்

### பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன்



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நீண்டகாலமாகவே உறுதியாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் இன்று இடம் 11

## அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனவே இம்முறை வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்வது மிகவும் முக்கியமானது 11

## தடைகளையும் மீறி பிக்குகள் அடாவடி

• திருகோணமலையில் பதற்றம் • வேடிக்கை பார்த்த படையினர்





*(திருகோணமலை)* திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்று ஒன்று கூடிய சிங்கள மக்கள், பௌத்த தேரர்கள் தலைமை தாங்க ஊர்வலமாக வந்து ஜனாதிபதியின் உத்தரவை மீறி நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள அடைக்கப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து சமய அனுட்டானங்களை மேற்கொண்ட நிலையில் திருகோணமலை நகரப்பகுதியில் பதற்றநிலை உருவாகியது. *(02ஆம் பக்கம் பார்க்க)*

2024ஆம் ஆண்டில்

## ஜனாதிபதியாக ரணில் பிரதமராக பசில்

### அத்துரலியே ரத்ன தேரர்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ரணில் ஜனாதிபதி, பஷில் ராஜபக்ஷ பிரதமர் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்து கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான தரப்பினர் 02

## எரிபொருள் விலையில் புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

எரிபொருள் விலைகள் தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றை அரசாங்கம் பின்பற்றவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அடுத்த மாதம் முதல் 3 தனியார் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடவுள்ளன.

இந்த நிறுவனங்களையும் சேர்த்து மொத்தமாக 5 நிறுவனங்கள் இலங்கை 11

## திருமலையில் பௌத்த வழிபாட்டை தடுத்தால் பாரிய அழிவு ஏற்படும்

### சரத் வீரசேகர



(கொழும்பு)

திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வைத் தடுக்க முற்பட்டால், பாரிய அழிவு ஏற்படும் என இனவாதியான சரத் வீரசேகர தெரிவித்திருக்கும் விடயம் பாரிய அச்சுறுத்தலாகும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். 11

திருகோணமலையில்

## புத்தர் சிலையை நிறுவ வேண்டாம்



ஜனாதிபதி ரணில் உத்தரவு

3ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறு

### சுமந்திரன் தெரிவிப்பு



(வவுனியா)

தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்வது நல்ல விடயம். ஆனால் சீர்திருத்தம் இன்னும் செய்யவில்லை என்ற காரணத்திற்காக மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது 11

## ஜனாதிபதியின் அதிகாரங்கள் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன

### பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகாரங்கள் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்துள்ளார்.

ஜனாதிபதி அறிவித்தும் ஆளுநர்கள் பதவி விலகாமல் இருக்கின்றமை அரசியல் அமைப்பின் பிரகாரம் சிக்கலைத் தோற்று 11

## மரக்கறி விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மரக்கறிகளின் விலை கடுமையாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகிறோம்




யாழ்/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில்
ஆசிரியராக - 11.08.2011 முதல்
பிரதி அதிபராக - 02.01.2017
முதல் கடமையாற்றிய

### திரு. க.துஷ்யந்தன்

அவர்கள் 24.04.2023 முதல்
யா/ வாதரவத்தை விக்னேஸ்வர
வித்தியாலயத்தின் அதிபராக
கடமைப் பொறுப்பை
ஏற்றுள்ள இவ்வேளையில்
அவரது பணி
சிறக்க வாழ்த்துகிறோம்.

(C-6549)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யாழ்/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்**

# பெங்களூரு அணி வெற்றி



ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பட்டிங் செய்தது. துவக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய விராட் கோலி மற்றும் ஃபாப் டு பிளெசிஸ் அதிரடியாக ஆடினர். விராட் கோலி 18 ரன்களுக்கு ஆட்டமிழந்த நிலையில், ஃபாப் டு பிளெசிஸ் 44 பந்துகளில் 55 ரன்களை குவித்தார். இவரைத் தொடர்ந்து களமிறங்கிய கிலென் மேக்ஸ்வெல் 33 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்சர்களை விளாசி 54 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார். இதன் மூலம் 20 ஓவர்கள் முடிவில் பெங்களூரு அணி 5 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்களை எடுத்தது. ராஜஸ்தான் அணி சார்பில் ஆடம் சாம்பா, கேஎம் ஆசிஃப் தலா இரண்டு விக்கெட்டுகளையும், சந்தீப் சர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

172 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. துவக்க வீரர்களாக களமிறங்கிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஜாஸ் பட்லர் டக் அவுட் ஆகினர். இவர்களை தொடர்ந்து களமிறங்கிய சஞ்சு சாம்சன் 4 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். ஜோ ரூட் 10 ரன்களுக்கு நடையை கட்டிய நிலையில், தேவ்தட் படிக்கல் 4 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். பின் களமிறங்கிய ஹெட்மயர் 19 பந்துகளில் 35 ரன்களை எடுத்து அவுட் ஆனார். பின் களமிறங்கிய வீரர்களும் சொற்ப ரன்களுக்கு ஆட்டமிழக்க ராஜஸ்தான் அணி 59 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. பெங்களூரு சார்பில் சிறப்பாக பந்துவீசிய பர்னெல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மைக்கல் பிரேஸ்வெல், கான் ஷர்மா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். கிளென் மேக்ஸ்வெல் மற்றும் முகமது சிராஜ் தலா 1 விக்கெட் கைப்பற்றினர். இதன் மூலம் பெங்களூரு அணி 112 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4,7)

# 430 அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 430 அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன அல்லது மறுசீரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயல்முறைகள் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பித்து இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் நிதி அமைச்சு, இந்த 430 அரச நிறுவனங்களை, நஷ்டம் மற்றும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களை, உத்தேச மறுசீரமைப்பு செயல்முறைக்காக அடையாளம் கண்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ், சில நிறுவனங்கள் விற்கப்படும் சில நிறுவனங்கள் மூடப்படும் அல்லது இணைக்கப்படும் அல்லது மறுகட்டமைக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

430 நிறுவனங்களில் 39 கூட்டுத்தாபனங்கள் 218 நிறுவனங்கள் மற்றும் 173 சட்டபூர்வ சபைகள் உள்ளன. நிறுவனங்களில் 21 பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களும் அடங்குகின்றன. (4,7)

## தடைகளையும்...

தமிழ் மக்கள் பேரவையினர் நேற்று முன்தினம் காலை தொடக்கம் நேற்று காலை வரை நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களம் அடையாளப்படுத்தியிருந்த நிலத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்ட மொன்றை நடத்தியதோடு, நேற்று காலையில் குறித்த பௌத்த நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு ஊடகங்களுக்கு பேட்டி வழங்கியதுடன், குறித்த இடத்திலிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

இவர்கள் கலைந்து சென்ற சில நிமிட நேரத்தில் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து தேரர்கள் தலைமையில் அணிவகுத்து வந்த 2,000இற்கு மேற்பட்டவர்கள், நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள காணிக்குள் அத்துமீறி நுழைந்து பௌத்த தேரர்கள் பிரித்தோதியதுடன் சிங்கள மக்கள் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

இவ்வேளையில் தமிழ் மக்கள் கலகத்துக்கு பயந்து அவ்விடத்தை விட்டு விலகி சென்றனர். வந்தவர்கள் தங்களை தாக்கக்கூடும் என்ற பீதியில் குறித்த இடத்தலிருந்து விலத்தி சென்றனர்.

பெர்லிஸார் வந்தவர்களை தடுக்க முற்பட்டபோதிலும் அது முடியாமல் போன நிலையில் அத்துமீறியவர்கள் வளவுக்குள் புகுந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தாய்லாந்திலிருந்து வந்திருக்கும் பௌத்த தேரர்கள் நெல்சன் தியேட்டருக்கு முன்னுள்ள அரச மரத்தடிக்கு வந்து புத்தர் சிலையொன்றை வைத்து வழிபட்டு பிரித்தோதி அங்கிருந்து கண்டிக்கு பாத யாத்திரை செய்வதாக திட்டமிடப்பட்டிருந்த நிலையில், மேற்படி நிகழ்வை இந்து ஆலயமான வில்லூன்றி கந்தசாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் மேற்கொள்ள வேண்டாமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பின் இரா. சம்பந்தன் மற்றும் பொது அமைப்புக்கள், இந்து அமைப்புக்கள் கோரியதற்கு அமைய மேற்படி பௌத்த வழிபாடு வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஜெயவிக்கிரம உறுதி அளித்தார்.

அவ்வாறான சூழ்நிலையில் குறித்த இடத்தை சுற்றி பறக்கவிடப்பட்டிருக்கும் கொடிகளை அகற்றவேண்டுமென்ற கோரிக்கை கனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியவர்களால் விடுக்கப்பட்டிருந்தது.

கொடிகள் அகற்றாத நிலையில் போராட்டகாரார்கள் சம்பவம் நடைபெற திட்டமிடப்பட்ட நேரம் வரை தமது கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதென முடிவு செய்து நேற்று காலை கலைந்து சென்றதன்பின் குறித்த தரப்பினர் மணிக்கூட்டு கோபுரத்தடியிலிருந்து ஊர்வலமாக வந்து அத்துமீறி நுழைந்ததுடன் தியேட்டருக்கு முன்னுள்ள அரச மரமொன்றின் கீழ் வழிபாடுகளை மேற்கொண்டு பௌத்த கொடிகளை மரத்தை சுற்றி அணிந்து விட்டு சென்றுள்ளனர்.

அதன்பின் அவ்விடத்தில் விசேட இராணுவப்பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (4,7)

## ஜனாதிபதியாக...

செயற்படுகிறார்கள்.

இவ்விருவரின் ஆட்சியை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை என மேலவை இலங்கை கூட்டணியின் ஆலோசகரும்,பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மேலவை இலங்கை கூட்டணி காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது எவரும் அரசாங்கத்தை ஏற்க முன்வரவில்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

நாட்டு மக்கள் ராஜபக்ஷர்களை முழுமையாக புறக்கணித்த பின்னணியில் ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

மக்களால் கடுமையாக வெறுக்கப்பட்ட ராஜபக்ஷர்கள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதுகாப்பான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என தெரிவித்தார். (4,7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
07
06
1933

மறைவு
17
04
2023

### அமரர் சிதம்பரப்பிள்ளை செல்லம்மா

கடந்த 17.04.2023 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாய், அன்பு மாமி, பாசமிகு அம்மம்மா, பாசமிகு அப்பம்மா, அவர்களின் மறைவுச் செய்தி கேட்ட தருணத்தில் விரைந்து வந்து சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரம் மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.05.2023 இன்று திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரண கிரியைகள் 17.05.2023 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(C-6552)

தகவல்:
சி.மதன்மோகன்
(ஓய்வுநிலை மதுவரி அத்தியட்சகர்)

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் புத்தர் சிலையை நிறுவ வேண்டாம்

## உரிய தரப்பினருக்கு அறிவுறுத்திருப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**திருகோணமலையில் இந்துக்கோயில் அமைந்துள்ள மற்றும் இந்துக்கள் செறிந்து வாழும் பகுதியில் புத்தர் சிலையை நிறுவக்கூடாது என உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.**

கண்டி, அஸ்கிரிய பீடத்தின் ஏற்பாட்டுக்கு அமைய தாய்லாந்திலிருந்து வரும் 40 பௌத்த தேரர்கள் அடங்கிய குழு திருகோணமலை நெல்சன் தியேட்டருக்கு முன்பாக இருக்கும் நிலத்தில் புத்தர் சிலையொன்றை கொண்டுவந்து வைத்து, பிரித் ஓதி, அங்கிருந்து கண்டிக்குப் பாத யாத்திரை மேற்கொள்ள விருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது இந்துக் கோயிலான வில்லூன்றி கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான காணி என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது குறித்த பகுதியில் புத்தர் சிலையை நிறுவக்கூடாது என்றும் வில்லூன்றி கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் பிரித் ஓதும் நிகழ்வில் ஈடுபடவேண்டாம் என்றும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# பதவி விலகல் தொடர்பாக இதுவரை முடிவில்லை

### வடக்கு-கிழக்கு உட்பட 5 மாகாண ஆளுநர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியோ அல்லது ஜனாதிபதி செயலகமோ இதுவரை எழுத்து மூலம் தம்மை பதவி விலகுமாறு அறிவிக்கவில்லை என மாகாண ஆளுநர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட ஐந்து மாகாண ஆளுநர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளதுடன் பதவியை ராஜினாமா செய்வது குறித்து தாங்கள் இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர். சப்ரகமுவ, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களை இராஜினாமா செய்யுமாறு அண்மையில் அறிவிக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார். (நி)

# ஆட்சி கவிழ்ப்புக்கு இடமளிக்க மாட்டேன் சதி முயற்சியைத் தோற்கடிப்பேன்

### ரணில் சூளுரை


(கொழும்பு)

"சதியூடாக எனது ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அதற்கு நான் இடமளிக்கமாட்டேன். அந்த முயற்சியை முழுமையாகத் தோற்கடிப்பேன்" என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சூளுரைத்துள்ளார்.

சதி முயற்சி தொடர்பான உளவுத் தகவல்களையடுத்து கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. உளவுத் தகவல்களுக்கு அமைவாக அவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சதி நடவடிக்கை ஊடாக ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் அது நிச்சயமாகத் தோல்வியில் தான் முடியும்" எனவும் ரணில் தெரிவித்தார். (நி)

# மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 70.04 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.17 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

எனினும் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை அதிகரிப்பை பதிவு செய்து 2.26 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

# தமிழ்த் தரப்புகள் பிரிந்து நிற்பது துரதிஷ்டவசமானது - ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வினைக் காண்பதற்காக இதய சுத்தியுடன் ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் அதில் பங்கேற்பதற்கு தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்காக தமிழ்த் தரப்பினை பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறித்து தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மலையக தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புக்களையும் தனித்தனியாக சந்திப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான மிகப் பொருத்தமான தொரு தருணம் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தரப்பினரும், ஏனைய தமிழ்த் தரப்புக்களும் பிரிந்து நிற்பது துரதிஷ்டமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இரா.சம்பந்தனின் காலத்திற்குள் தமிழ், முஸ்லிம் மக்களினது விவகாரங்களுக்கு நிரந்தரமான முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடு என்றும் அனைத்து விடயங்களும் விரைவில் சீர் செய்யப் பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 853 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு கொரோனா மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை 8 பேர் கொரோனா தொற்றால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் 672,283 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# உள்நாட்டு வியாபாரக் குறியீட்டுடன் நச்சுத் தன்மை கொண்ட தேங்காய் எண்ணெய்

### பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நச்சுத் தன்மைக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய், இலங்கையில் உள்நாட்டு வியாபாரக் குறியில் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

குருநாகல் பகுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அதன் பிரதான இணைப்பாளர் புத்திக டி சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட நச்சுத் தன்மை கொண்ட தேங்காய் எண்ணெய் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமை பிரச்சினைக்குரியதாகும்.


நச்சுத்தன்மை கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அடங்கிய கொள்கலன் ஒன்று கெக்கிராவ பகுதியில் வைத்து பொது சுகாதார பரிசோதகர்களால் மீட்கப்பட்டது.

இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்து வெவ்வேறு இரசாயன திரவங்களை பயன்படுத்தி அவற்றை தூய்மைப்படுத்தி சந்தைக்கு விடுவிக்கின்றமை தொடர்பில் முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த தேங்காய் எண்ணெய் தொகுதி துறைமுகத்தில் இருந்து எவ்வாறு வெளியேற்றப்பட்டது என்பது தொடர்பில் கேள்வி எழுவதாகவும் அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதான இணைப்பாளர் புத்திக டி சில்வா தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி கேப்பிட்டல்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் மோதல் 31 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அபார வெற்றி




ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் டெல்லி கேப்பிட்டல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற டெல்லி கேபிட்டல்ஸ் பந்துவீச முடிவு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய பஞ்சாப் கிங்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 167 ரன்களை சேர்த்தது. அதிரடியாக ஆடிய பிரப்சிம்ரன் 65 பந்துகளில் 10 பவுண்டரிகள், 6 சிக்சர்களுடன் 103 ரன்களை விளாசினார்.

டெல்லி அணி சார்பில் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அக்சர் பட்டேல், பிரவீன் துபே, குல்தீப் யாதவ், முகேஷ் குமார் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 168 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது. கப்டன் டேவிட் வார்னர் 27 பந்தில் 54 ரன்கள் குவித்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், டெல்லி அணி 136 ரன்களை மட்டுமே எடுத்தது. இதன் மூலம் பஞ்சாப் கிங்ஸ் 31 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பஞ்சாப் கிங்ஸ் சார்பில் ஹர்பிரீத் பிரார் 4 விக்கெட்டும், நாதன் எல்லீஸ், ராகுல சஹார் தலா 2 விக் கெட்டும் வீழ்த்தினர். இந்த தோல்வி மூலம் நடப்பு ஐ.பி.எல் தொடரின் பிளே ஆப் சுற்றில் இருந்து டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி வெளியேறியது. (நி)

# உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி உலக சாதனை படைத்த இந்திய வீராங்கனை




அஜர்பைஜான் நாட்டின் பகு நகரில் சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில், நேற்று முன்தினம் நடந்த இளநிலை மகளிருக்கான 25 மீற்றர் பிஸ்டல் பிரிவுக்கான போட்டியில், இந்திய துப்பாக்கி சுடுதல் வீராங்கனை ரிதம் சங்வான் (19), கலந்துகொண்டார். இந்தப் போட்டியில், அவர் தகுதிச் சுற்றில் 595 புள்ளிகள் சேர்த்தார்.

கடந்த 1994 ஆம் ஆண்டு பல்கேரிய வீராங்கனை டயானா லார்கோவா 594 புள்ளிகள் சேர்த்து இருந்ததே இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது.

அதனை சங்வான் முறியடித்துள்ளார். இதற்கு முன் 1989 ஆம் ஆண்டு ரஷ்ய வீராங்கனை நினோ சலுக்வத்ஜேவின் (593 புள்ளிகள்) சாதனையையும் முறியடித்துள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2830

**நிரஞ்சன்**

போதைப்பொருட்கள் பட்டியல்ல செல்ஃபோனையும் சேர்க்கனும்... ஒரு மணி நேரம் பார்க்கலைன்னா கை, காலெல்லாம் நடுங்குது....



**றொபின்சன்**

எந்த ஊர் விஞ்ஞானினு தெரியல்ல...



**நிலான்**

ஒரு பெண் 1 மணி நேரத்தில 25 தோசை சுட்டா 2 பெண்கள் 1 மணி நேரத்தில எத்தனை தோசைகள் சுடுவாங்க சொல்லு...



2 பெண்கள் சேர்ந்தா அவங்க பேசிக்கவே நேரம் பத்தாது.. அப்போ எப்படி சேர் தோசை சுடுவாங்க...

**கீசிங்கர்**




**டிபிஷா**

அண்ணே மொபைல் போன்ல எந்த ஆஃப்ப பயன்படுத்தினால் மகிழ்ச்சியா, நிம்மதியா இருக்க முடியும்?

தெரியலடா... அது எந்த ஆஃப்டா..?



அது சுவிட்ச் ஆஃப் அண்ணே...

**தனுசன்**

அம்மிக்கல்லை தலையில் போட்டு கணவன் கொலைன்னு நியூஸ் பார்க்கிறப்ப...

அம்மிக்கல்ல தூக்கிற அளவுக்கு திடமான பொண்டாட்டிக்கிட்ட எதுக்கடா சண்டை போட்டு தொலைக்கிறீங்க....



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி மலையில் சிவதாண்டவம்




(சாவகச்சேரி)

வவுனியா -நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் கலை பண்பாட்டுப் பிரிவின் ஒழுங்கமைப்பில் சிவதாண்டவம் நடன நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

கடந்த 10ஆம் தேதி ஆதி லிங்கேஸ்வர பெருமான் ஆலயத்தின் 12ஆம் நாள் மண்டலாபிஷேக பெருவிழா இடம்பெற்ற நிலையில் அதனையொட்டி சிவதாண்டவ நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றிருந்தன. (நி-30)

### மந்துவில் பகுதியில்

# 150 வருட பழைமையான மரம் அடியோடு முறிந்து விழுந்தது

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மந்துவில் சின்னசந்தைப் பகுதியில் நின்ற 150 வருடங்கள்பழைமை வாய்ந்த புளியமரம் ஒன்று அண்மையில் அடியோடு முறிந்து விழுந்துள்ளது.



கடந்த சில தினங்களாக காணப்பட்ட மழை மற்றும் அதனுடன் கூடிய கடும் காற்று காரணமாக குறித்த புளியமரம் முறிந்து விழுந்து ள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

### வவுனியாவில்

# நான்கு நாட்களாக இருளில் மூழ்கிய கிராமங்கள்

## அதிகாரிகளின் அசமந்தம் குறித்து மக்கள் விசனம்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் மாகாறம்பைக்குளம், காத்தார் சின்னக்குளம், சிறிராமபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களில் ஒரு பகுதியை சேர்ந்தவர்களுக்கு தொடர்சியாக நான்கு நாட்களாக மின்சாரம் தடைப் பட்டுள்ளது.

மேலும் இவ் மின்சார தட ங்கல் காரணமாக பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், மின்சாரத்தை மூலதனமாக கொண்டும் தொழில் புரியும் பலரும் பல அசௌ கரியங்களை எதிர்நோக்கி யுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் மின்சார தடங்கல் தொடர்பாக வவுனியா மின்சார சபை மற்றும் வடக்கு மாகாண மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு முறைப்பாடு மேற்கொண்டும் தங்க ளுக்கு உரிய பதில் கிடைக் கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-299)

# மே.18 ஐ முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான முகாம்

(அராலி)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன் னிட்டு நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற் பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்னால் இரத்ததான முகாம் நடைபெற்றது. (நி-104)

# வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய பூசாரியிடம் நெடுங்கேணி பொலிஸார் விசாரணை முன்னெடுப்பு

(வவுனியா)

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரியிடம் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெடுக்குநாறி மலை ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் வவுனியா நீதிமன்றத்தால் கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் சனிக்கிழமை விசாரணையொன்றுக்காக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு ஆலயத்தின் பூசாரி மற்றும் அவரது மனைவியை நெடுங் கேணி பொலிஸார் அழைத்து மூன்று மணி நேரத்திற்கும் மேல் விசாரணை நடத்தியுள்ளனர்.

அதனையடுத்து. நேற்று ஆலய பரிபாலன சபையின் போசகர் விசாரணைக்காக அழைக் கப்பட்டுள்ளார்.

மேலும், சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஆறு திருமுருகனிடம் யாழில் வைத்து நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

இதன்போது புதிதாக வழங் கப்பட்ட விக்கிரகங்கள் தொடர் பிலும் விசாரிக்கப்பட்டது.

இந்நிலையில், "எங்கள் மீதான விசாரணைகளே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆலய விக்கிரகங்கள் உடைத் தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எந்த சந்தேக நபரையும் நெடுங் கேணி பொலிஸார் கைது செய்ய வில்லை.

யாரும் விசாரிக்கப்படவும் இல்லை" என்று ஆலய நிர்வாகத்தினர் இவ்விடயம் குறித்து ஆதங்கப்படுகின்றனர். (நி-299)

# இராசிபலன்

15.05.2023
வைகாசி 01, திங்கட்கிழமை
ஏகாதசி பின்னிரவு 1.58 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.10 மணிவரை

சுபநேரம் -11.53-1.23 மணிவரை
இராகுகாலம்-7.23-8.53 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்-
ஆயில்யம்

வளவன்




நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன் வருவர், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




கோபத்தைக் குறைத்துகொள்வது நல்லது, மறதியால் தவறிய காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.




தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கௌரவமான நாள்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள்.




வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.




மகிழ்ச்சி கூடும்நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.




நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வாக்கு மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வாழ்க்கைத்துணை வழியே வசந்தம் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




நண்பர்களால் நன்மையுண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

இன்பத்தின் ரகசியம் நீ விரும்புவதல்ல. உன்னை பிறர் விரும்புவதில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



(பொத்துவில்)

வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டமானது நேற்று பிற் பகல் 2 மணியளவில் பொத்து வில் சாலம்பையடி பிள்ளை யார் ஆலயத்தின் முன்பாக இடம்பெற்றது.

இதன் பொழுது முள்ளி வாய்க்கால் கஞ்சியின் வரலாறு அடங்கிய துண்டுபிரசுரமும் வழங்கப்பட்டது. (நி)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாகனம் கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தது

(முறிகண்டி)

தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாகனம் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தது.

முள்ளிவாய்க்காலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஊர்தி பயணம் வவுனியா, மன்னார், மல்லாவி ஊடாக பயணித்து மூன்றாம் நாளான நேற்று கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு சந்தியில் நிறை வடைந்தது.

குறித்த ஊர்தியின் நான் காம் நாள் பயணம் நாளை காலை இரணைமடுச்சந்தி யிலிருந்து ஆரம்பித்து பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தை சென்றடையும் என குறித்த குழுவின் தலைவர் ஊடகங் களிற்கு தெரிவித்தார்.(நி-100-316)



## பிரான்ஸில் நடைபெற்ற பாண் தயாரிப்புப் போட்டியில் முதலிடம் பெற்ற இலங்கையர்



(பாரிஸ்)

பிரான்ஸில் நடைபெற்ற மிகச் சிறந்த பாண் தயாரிப்பா ளருக்கான போட்டியில் பிரா ன்ஸைச் சேர்ந்த இலங்கை யரான தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளார்.

பிரான்ஸின் 'பகெட்' (Baguette) எனும் நீளமான பாண் பிரசித்தமான ஓர் உணவாக விளங்கிறது.

"பாரம்பரிய பகெட்" என அடையாளப் படுத்தப்படக்கூடிய பாண் எப்படி தயாரிக்கப்பட வேண்டும் என்பதற்கு 1993 ஆம் ஆண்டில் பிரெஞ்சு பாரா ளுமன்றம் சட்டமொன்றையே இயற்றியது.

பாரிஸில் இவ்வகையான மிகச் சிறந்த பாணை தயாரி ப்பதற்கு வருடாந்தம் போட்டி நடத்தப்படுகிறது. "பாரிஸின் மிகச் சிறந்த பாரம்பரிய பிரெஞ்சு பகெட் க்றோன் ப்றீ" என அர்த்தப்படும் போட்டியில் தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளார்.

4,000 யூரோவுடன் பண ப்பரிசுடன், பிரெஞ்சு ஜனாதிபதி மாளிகைக்கு ஒரு வருட கால த்துக்கு பகெட் பாண் விநியோ கிக்கும் உரிமையும் அவரு க்குப் பரிசுகளாகக் கிடைத்து ள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கையை வந்தடைந்த தாய்லாந்து பிக்குகள்

(கொழும்பு)

தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 270 வருட பூர்த்தியை நினைவு கூரும் நோக்கில் திருகோ ணமலையிலிருந்து கண்டி நோக்கிய பாத யாத்திரையை முன்னெடுக்கும் முகமாக தாய்லாந்தில் இருந்து பௌத்த தேரர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

திருகோணமலை நகர இற ங்குதுறைக்கு இயந்திரப்பட குகள் மூலமாக நேற்று வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில் உட்டதுறை முக வீதி வழியாக கண்டி நோக்கிய பாத யாத்திரையை தாய்லாந்தில் இருந்து வருகை தந்துள்ள பௌத்த தேரர்கள் ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்தில் இருந்து வருகை தந்துள்ள பௌத்த தேரர்களை மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட நதில்லோ பஞ் ஞாலோகோ தேரோ மற்றும் குழுவினர் வரவேற்றமை குறி ப்பிடத்தக்கது. (நி)

# சீனாவில் அரசியல் செல்வாக்கினால் பாதிப்புக்குள்ளாகும் இலங்கை

## பிரிட்டன் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக் கினால் இலங்கையில் ஆபத்து க்கள் ஏற்படலாம் என பிரிட்டன் அமைச்சர் ஒருவர் தெரி வித்துள்ளார்

பிரிட்டனின் வெளியுறவு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் அன்ரூ மிட்செல் பொதுச்சபையில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந்தொற்றின் தாக்கம், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பின் தாக்கம் ஆகிய அனைத்தும் இலங்கை யின் பொருளாதாரத்திற்கு கடும் சவாலை ஏற்படுத்தியுள்ளன.

நீண்டகாலமாக நிதியை தவறாக முகாமை செய்தமை உட்பட கட்டமைப்பு பலவீன ங்களால் மேற்சொன்னவற் றின் தாக்கங்கள் அதிகரித்து ள்ளன.

நாங்கள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவ டிக்கைகளிற்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போம். இந்த பேச்சு வார்த்தைகளில் ஆக்கபூர்வ மாக கலந்து கொள்ளுமாறு அனைத்து கடன்வழங்குநர் களையும் கேட்டுக்கொள்கின் றோம் எனவும் அன் ரூமிட் செல் தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 |
| தக்காளி | 300 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 |
| கோவா | 240 | 250 | 250 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 50 |
| புடோல் | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 130 |
| பாகற்காய் | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 120 | 140 | 140 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 280 | 280 | 280 |
| பீற்றூட் | 250 | 250 | 200 |
| கறிமிளகாய் | 350 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 |
| போஞ்சி | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 220 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 |
| இராசவள்ளி | 350 | 280 | 300 |
| வெங்காயப்பூ | — | → | — |
| முள்ளங்கி | 80 | 100 | — |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 50 |
| ஈரப்பலா | 120 | — | — |

# இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை அவதானத்துடன் செயற்படும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறை முகம், போர் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக சீனா வினால் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்துள் ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவை கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். இந்தியாவின் பாதுகாப்பு குறி த்துக் கவனமாக இருக்க



வேண்டும் எனவும் இலங் கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதற்கமைய இந்தியாவுக் கும் இலங்கைக்கும் இடையில் விமான சேவைகள் இடம்பெறு வதுடன் தற்போது கப்பல் போக் குவரத்து ஆரம்பிக்கப்படவு ள்ளது. அத்துடன் இலங்கை தமது எரிசக்தி துறையை கட்டி யெழுப்புவதற்கு இந்தியா உதவுகிறது எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டி க்காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி மற்றும் பொது உதவித் திட்டங்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம்

## வெளியானது விசேட வர்த்தமானி

(கொழும்பு)

**எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் பொது உதவித் திட்டங்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் சமூக நலப் பலன்கள் கொடுப்பனவுத் திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் இதன் மூலம் 20 இலட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள் எனவும் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலம், 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி தொடக்கம் சமுர்த்தி உள்ளிட்ட பொது உதவிகள் நிறுத்தப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சமுர்த்தி வங்கி இதுவரை செலுத்திய நிதியுதவிகள், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியினால் செலுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 'டிக் டாக்' செயலியை கட்டுப்படுத்தாவிட்டால் பேரழிவு

## ஜனாதிபதி சட்டத்தரணி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

"டிக் டாக்"மொபைல் செயலியை குழந்தைகள் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தாவிட்டால், எதிர்காலத்தில் பேரழிவு நிலையை சந்திக்க நேரிடும் என சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

கையடக்கத் தொலைபேசி பாவனையால் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் ஜனாதிபதியின் சட்டத்தரணி யு.ஆர்.டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)


# கிருஷ்ணா அடைவுக்கடை

பதிவு இல J/ DS/ BR / 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.06.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி (15.06.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.06.2023) ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு- 2022 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**இல 370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**

**உரிமையாளர்,**
**இல 09 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5046.**

(4063)


# நான்கு சிறுவர்கள் மாயம்;

## காணாமல்போகும் சம்பவம் அதிகரிப்பு

(கண்டி)

நெலுவ தெல்லாவ, மியானாவடுர பகுதியில் ஒரே வீட்டில் தங்கியிருந்த பல குடும்பங்களைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் நேற்றிரவு தொடக்கம் காணாமல் போயுள்ளதாக நெலுவ பொலிஸார் தெரிவித்துள்ளார்.

ஒரு வயதும் 3 மாதங்கள் நிரம்பிய குழந்தை மற்றும் 10 வயது மற்றும் 13 வயதுடைய நான்கு சிறுவர்களே காணாமல் போயுள்ளனர்.

இவர்களின் பெற்றோர்கள் நெலுவ பிரதேசத்திலுள்ள தோட்டங்களில் தற்காலிகமாக பணிபுரிவதற்காக மியானதுர பிரதேசத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு பிள்ளைகளை காணவில்லை என முறைபாடு செய்துள்ளனர்.

காணாமல்போன சிறுவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் இல்லை எனவும் காலி திசபர பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் விஜேசிங்கவின் பணிப்புரைக்கமைய, நெலுவ பொலிஸார்விசேட பொலிஸ் குழுக்களை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(நி)

# இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்துவது தொடர்பில் ஐ.எம்.எப் இற்கு அறிக்கை

(கொழும்பு)



தற்போது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பான அறிக்கை அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# 2 வாரங்களுக்கு பாடசாலை விடுமுறை

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இம்மாதம் 27 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 11 ஆம் திகதி வரை பாடசாலைகள் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)


# INVITATION fOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee. Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/ Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Dialysis unit store & Coverdway to Rehabilitation Center. | 500.00 | 117,000.00 | 91 | 5.8 | C 7 |
| 2. | Landscaping Infront of A&E Building & Repairing works at OPD Toilet. | 500.00 | 48,000.00 | 91 | 2.3 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been black-listed and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction. Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB. Jaffna during office hours. if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 16.05.2023 up to 30.05.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office. Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 31.05.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**13.05.2023.**

(c-6546)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 178





இந்த அந்தரங்க வேலைக்கு அவனைப் பழுவேட்டரையர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மதுராந்தகத் தேவரைச் சுரங்க வழியில் அழைத்துச் செல்லத் துணையாக அனுப்பி வைத்திருக்கிறார். ஆகா! இப்போது நினைத்துப் பார்த்தால் ஞாபகம் வருகிறது. "எனக்குக் கூடத் தஞ்சாவூரில் ஒரு வேலை இருக்கிறது. நானும் அங்கே வந்தாலும் வருவேன்!" என்று கந்தமாறன் சொன்னான் அல்லவா? இப்போது இங்கே திடீர் என்று, தான் கந்தமாறன் முன்னால் போய் நின்றால், அவன் என்ன செய்வான்? இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அதை வல்லவரையன் மாற்றிக் கொண்டான். இந்தச் சமயத்தில் கந்தமாறன் முன்னால் தான் எதிர்ப்பட்டால், அவன் செய்துள்ள சபதத்தை முன்னிட்டுத் தன்னைக் கொல்ல நேரிடும் அல்லது தான் அவனைக் கொல்ல நேரும். அப்படிப் பட்ட தர்ம சங்கடத்தை எதற்காக வருவித்துக் கொள்ள வேண்டும்?.

இதற்குள் அந்த மூவரும் படிக்கட்டில் மேலேறிப் போய் விட்டார்கள். வெளிச்சமும் வர வர மங்கத் தொடங்கியது. அவர்களைப் பின் தொடர்ந்து போகலாமா என்று வந்தியத்தேவன் ஒரு கணம் நினைத்து, அதையும் உடனே மாற்றிக் கொண்டான். அவர்கள் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்குப் போகிறார்கள் என்பது நிச்சயம். அங்கே தான் திரும்பிப் போவதில் என்ன பயன்? சிங்கத்தின் குகையிலிருந்து தப்பித்து வந்த பிறகு தலையைக் கொடுப்பது போலத்தான்! இனித் திரும்ப நந்தினி இருந்த லதா மண்டபத்துக்குப் போவதிலும் பயன் இல்லை. ஒருவேளை பெரிய பழுவேட்டரையர் இதற்குள் அங்கு வந்திருக்கலாம். அதுவும் அபாயகரந்தான் வேறு என்ன செய்யலாம்? ஏன்? இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கிப் போய்ப் பார்த்தால் என்ன? இவ்விதம் எண்ணி நம் வாலிப வீரன் அந்தச் சுரங்கப் படிக்கட்டில் இறங்கினான்.

## நாற்பத்தோராம் அத்தியாயம்
## நிலவறை

இருண்ட சுரங்கப் பாதையில் வந்தியத்தேவன் காலை ஊன்றி வைத்து, விழுந்து விடாமல் நடந்தான். படிகள் கொஞ்ச தூரம் கீழே இறங்கின. பிறகு சமநிலமாயிருந்தது. மறுபடியும் படிகள். மீண்டும் சமதரை. இரண்டு கைகளையும் எட்டி விரித்துப் பார்த்தான் சுவர் தட்டுப்படவில்லை. ஆகவே, அந்தச் சுரங்க வழி விசாலமானதாகவே இருக்க வேண்டும். மறுபடி சற்றுத் தூரம் போனதும் படிகள் மேலே ஏறின. வளைந்து செல்வதாகவும் தோன்றியது. அப்பப்பா! இத்தகைய கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டுமோ தெரியவில்லையே!

ஆகா! இது என்ன! இருள் சிறிது குறைந்து வருகிறதே! மிக மிக மங்கலான ஒளி தோன்றுகிறதே! இந்த மங்கிய ஒளி எப்படி எங்கிருந்து வருகிறது? மேலே கூரையில் எங்கிருந்தாவது வரும் நிலவின் ஒளியா? அல்லது சுவர்களில் உள்ள பலகணி வழியாக வரும் ஒளியா? மறைவான இடத்தில் வைத்திருக்கும் விளக்கிலிருந்து பரவும் ஒளியா?

இல்லை, இல்லை! இது என்ன அற்புதம்? நம் கண் முன்னால் தெரியும் இந்தக் காட்சி மெய்யான காட்சி தானா? அல்லது நமது மூளை கலங்கியதால் ஏற்பட்ட தோற்றமா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உருவுகண்டு எள்ளாமை வேண்டும்



முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார்.

இது வரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச் செய்தார்.

சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது. மன்னன் நாள் தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக் கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் துங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார்.

மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்து விட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஆம், அவன் பெயர் அழிக்கப் பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக் கப்பட்டிருந்தது.

இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது.

"இவ் வளவு பாடுபட்டுப் பெரும்பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லா அக்கிரமமும் நடக்கிறதெனில் பொலிஸ் சேவை எதற்கு?

நாட்டில் எல்லா அக்கிரமங்களும் சர்வ சாதாரணமாக நடந்தாகின்றன.

கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், துப்பாக்கிச்சூடு, அடிபாடு, போதைவஸ்து கடத்தல், உணவுக் கலப்படம் என அனைத்து அநியாயங்களும் அச்சமின்றி நடந்தாகின்றன.

அதிலும் ஆளைக் கடுமையாகத் தாக்கி அதனை ரிக்ரொக்கில் பதிவேற்றம் செய்கின்ற அளவில் நிலைமை முற்றிவிட்டதெனில், இதற்கான காரணம் யாது என்று அறிவது கட்டாயமானதல்லவா?

ஆம், ஒருவரைத் தாக்கினால், தாக்கியவர்களைப் பொலிஸார் கைது செய்வர். அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

நீதிமன்றம் விதிக்கின்ற தண்டத்தை அவர்கள் அனுபவித்தாக வேண்டும். இதுவே சட்டத்தின் படிமுறை.

இவ்வாறு சட்டம் தனது கடமையை முறையாகச் செய்தபோது, சண்டை சச்சரவுகளை மக்கள் புறக்கணித்தனர்.

தவிர, தேவையில்லாத வில்லங்கங்களில் ஈடுபட்டால் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என அலைய வேண்டும்.

அந்த அலைச்சல் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். கௌரவமாக வாழ முடியாமல் போகும். சமூகத்தில் நன்மதிப்பு இழக்கப்படும் என்ற பயம் இருந்தது.

இவ்வாறான பயத்தை ஏற்படுத்தக்கூடிய தரப்பாக பொலிஸ் சேவை இருந்தது.

அதாவது குற்றம் செய்தால், அதனைப் பொலிஸார் நிச்சயம் கண்டறிவர். பொலிஸாரிடம் இருந்து தப்பவே முடியாது என்ற நினைப்பே மக்களை மரியாதையாக வாழ வைத்தது.

ஆனால் இன்றைய சமகாலம் என்பது அவ்வாறானதல்ல. மாறாக், எடுத்த எடுப்பில் எதிரிகளை வெட்டிக் கொல்ல முடியும். கடத்த முடியும். வீடு புகுந்து தாக்குதல் நடத்த முடியும். தெருக்களில் சண்டித்தனம் காட்ட முடியும். எங்களுக்குத் தெரியாத பொலிஸாரா என்று கேட்கின்ற அளவில் சண்டித்தனக் கலாசாரம் பெருகிவிட்டது.

இதனைப் பொலிஸாரும் கட்டுப்படுத்துவதாக இல்லை.

புனிதமான பொலிஸ் சேவையில் இலஞ்சம் என்ற கொடுமை புகுந்துவிட்டது.

இலஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு குற்றவாளிகளைத் தப்பவைப்பதில் பொலிஸார் கரிசனை காட்டும்போது, நடக்கின்ற அக்கிரமங்களை எங்ஙனம் தடுத்துநிறுத்த முடியும்.

ஆக, ஒருவர் மீது தாக்குதல் நடத்துவதைப் பகிரங்கப்படுத்துகின்ற அளவில் சமூக வன்முறைகள் விஸ்வரூபமெடுத்துள்ளன எனில், பொலிஸாரின் சேவையில் மிகப் பெரும் பழுது ஏற்பட்டுவிட்டது என்பதே அதன் பொருளாகும்.

எனவே பொலிஸ் சேவை தூய்மைப்படுத்தப்படாத வரை இந்த நாட்டில் எல்லா அக்கிரமங்களும் நடந்தேயாகும். இது நிறுதிட்டமான உண்மை.

## ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக்கு மீள விண்ணப்பிக்கும் செயன்முறைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு மீள விண்ணப்பிக்கும் செயன்முறையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட அதிகாரியும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதித் தலைவருமான ஜோஸப் பொரெல் தன்னிடம் உத்தரவாதம் வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது, இந்தோ - பசுபிக் பிராந்திய அமைச்சர் மட்ட மாநாடு சுவீடனின் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற நிலையில் அதில் அலி சப்ரி கலந்து கொண்டிருந்தார்.

ஐரோப்பிய வெளி விவகார செயற்பாட்டுப் பிரிவுடன் இணைந்து சுவீடனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் இந்தோ-பசுபிக் பிராந்திய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். (4-7)

## பயங்கரவாத சட்டத்தின் பாதிப்பு தொடர்பில் வவுனியாவில் விழிப்புணர்வுக் கூட்டம்

(வவுனியா)

புதிய உத்தேச பயங்கரவாத சட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்போது புதிதாக உருவாக்கப்படவுள்ள உத்தேச பயங்கரவாத சட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரம் மறுக்கப்படல் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் செயலாளர் ப. சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஜனாதிபதி சட்டத் தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் மற்றும் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவி கோசலை மதன் ஆகியோர் கலந்து கொண்டு இவ் உத்தேச பயங்கரவாத சட்டத்தின் தன்மை அதனை நடை முறைப்படுத்தினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் மற்றும்அரசியல்வாதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-7)

## 14 இலட்சம் சிறார்களுக்கு காலை உணவு இல்லை

### வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது 14 இலட்சத்துக்கும் அண்மித்த எண்ணிக்கையிலான மாணவர்கள் போதியளவில் காலை உணவை உண்பதில்லை என பாராளுமன்ற உறுப்பினரும் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவருமான காமினி வலேபொட சுட்டிக்காட்டியுள்ளார்.

காலையில் எந்தவோர் உணவையும் உட்கொள்வதில்லை என்பது வைத்திய பரிசோதனைத் தகவல்களின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளதாகவும் இது பொருளாதார பாதிப்பினால் ஏற்பட்டிருக்கும் அழுத்தமாகுமென்றும் காமினி வலேபொட குறிப்பிட்டுள்ளார்.

காலை உணவைத் தவிர்ப்பது குழந்தைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இது சோதனைகள்மூலம் உறுதியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## செம்மணியில் தனியார் பேருந்து மீது தாக்குதல்

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் இருந்து யாழ் நோக்கி வந்த தனியார் பயணிகள் பேருந்து மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் செம்மணி பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாவற்குழி பகுதியை அண்மித்து மேற்படி பேருந்தினை சிலர் மறித்ததாகவும்-பேருந்து நிறுத்தாமல் சென்ற நிலையில் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து செம்மணிப் பகுதியை அண்மித்து பேருந்தை வழிமறித்து பேருந்தின் கண்ணாடி மீது தலைக்கவசத்தினால் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

## உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காவிட்டால் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க முடியாது

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள, தொழில் நிபுணர்கள் சங்கத்தினருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வரிக் கொள்கை தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தெரிவித்துள்ளன.

அதிகரிக்கப்பட்டுள்ள வரி விகிதம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டதாக தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் பேராசிரியர் அருண சாந்த ஆராச்சி தெரிவித்தார்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட்டால் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க முடியாது என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ... பிட்டிஅல்லைப்பிட்டிதேவாலயத்தடி,மண்டைதீவு, மண்கும்பான், மண்கும்பான் விடுதியடி, பூம்புகார், வெண்புரவிநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக் குளத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** ஒல்லி ... பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும்.

## 1000 வைத்தியர்கள் இவ்வருடத்துடன் ஓய்வு

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் சுமார் 350 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் அடுத்த மாதம் ஓய்வுபெற உள்ளனர்.

இதன் காரணமாக நாட்டில் உள்ள பல கிராமிய வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரே நேரத்தில் 350 பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் ஓய்வு பெற்றால் குறைந்தது 50 கிராமிய வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், 350 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், 400 பட்டதாரி மருத்துவ அலுவலர்கள், 300 சிறப்பு மருத்துவர்கள் என மொத்தம் 1000 மருத்துவர்கள் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஓய்வுபெற உள்ளனர். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு


## தொகுப்பு- I

10

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



படம்-C




மரத்தால் ஆக்கப்பட்ட தோணிகளுக்குப் பதிலாக அண்மைக்காலந்தொட்டு கண்ணாடிநாரிழைத் தோணிகள் தயாரிக்கப்படுகின்றன. கடற்கரைக்கு அண்மையில் உள்ள கடலில் மீன் பிடிப்பதற்காகத் தோணிகள் சார்ந்த உபகரணம், சிறிய மீன்களைப் பிடிப்பதற்கான செவுள் வலைகள் என்பனவற்றைக் கொண்டு தொழிலில் ஈடுபடுவதற்காக மேற்படி தோணிகள் பயன்படுத்தப்படும். இலங்கையில் தென் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பெரும்பாலும் சிறிய தோணிகளையே கையாளுகின்றனர்.

### பாதைப் படகுகள்

இதுவும் புராதன காலந்தொட்டுப் பயன்படுத்தப்படும் உபகரணமாகும். இருபுறம் தோணியை ஒத்த தோற்றமுடைய இரு பலகைகள் கயிறுகளால் வரிந்து கட்டப்பட்டிருக்கும். பொதுவாக ஒரு பாதைப்படகின் நீளம் 11 - 14 மீற்றராகும். அதன் அகலம் சுமார் 02 மீற்றர். பெரும்பாலும் முன் பாகத்தைவிடப் பின்பாகம் சற்று அகலம் கூடியதாகக்காணப்படும். ஒரு பாதைப் படகில் ஏழு அல்லது எட்டு மீனவர்கள் செல்ல முடியும். இலங்கையில் தென்பகுதி, தென் மேல்பகுதி, மேற்குப் பகுதிகளில் அதிகமான பாதைப் படகுகள் கையாளப்படுகின்றன. இதுபெரும்பாலும் கரைவலை வளைக்கும் தருணங்களில் தான் பயன்படுத்தப்படும். குல்லாக்கட்டையைக் கொண்ட பாதைப் படகுகளும் சில வேளைகளில் கையாளப்படுவதுண்டு.

### நவீன மீன்பிடிக்கலன்கள்

**1. வெளியே என்ஜின் பொருத்தப்பட்ட கண்ணாடி நாரிழைப்படகு**

இலங்கை மீன்பிடிக் கைத்தொழிலில் 1930களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக கண்ணாடி நாரிழைப்படகு (படம்-e) அறிமுகஞ்செய்யப்பட்டுள்ளது. இது 18 - 24 அடிநீளமாககாணப்படும். இதில் அனேக எண்ணிக்கையான மீனவர்கள் பயணம் செய்யலாம். வேகமாகப் பயணிக்கக்கூடிய இது கரையோர பகுதியில் சேவையில் ஈடுபடும். செவுள்வலை, போன்ற வலைகள் இந்த மீன் பிடிக்கலனில் பயன்படுத்தப்படும். இதில் 5- 25க்கு இடைப்பட்ட குதிரைவலு கொண்ட என்ஜின் பொருத்தப்பட்டிருக்கும்.



கண்ணாடி நாரிழைப் படகு படம்-e

**2. உள்ளே என்ஜின் பொருத்தப்பட்ட பன்னாட்படகு**

இலங்கையில் ஆழ்கடல் மீன் பிடி அண்மைக் காலங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டது. 3 ½ தொன் நிறைகொண்ட (28அடி) மீன்பிடிக் கலன்கள் மூலமே ஆழ்கடல் மீன்பிடி ஆரம்பமானது.எனினும் இவை ஒரு



பன்னாட் படகு (படம்-f)

நாட்படகுளாகையால் பன்னாட்படகின் அவசியம் எழலாயிற்று.

தற்போது பயன்படுத்தப்படும் பன்னாட் படகில் ஐஸ் களஞ்சியமும் மீனவர்கள் தங்குவதற்கான அறையும் காணப்படும். 45 - 48 அடிநீளம் கொண்ட இவை 50 குதிரைவலு கொண்ட என்ஜினால் இயக்கப்படும். இவை அதிகளவு எரிபொருள், நீர் ஆகியவற்றை கொண்டு செல்லக் கூடியதாகவும் அதிக மீன்களைச் சேமித்து வைக்கக்கூடிய களஞ்சிய வசதிகளையும் கொண்டதாகும். இவ்வாறான மீன்பிடிக்கலன்களில் வானொலிச் செய்தி சமிக்ஞை உபகரணம், செய்மதி வழிகாட்டல் உபகரணம்,எதிரொலிமானி ஆகிய தொழில்நுட்ப உபகரணங்கள் காணப்படும்.இதனால் அதிக அளவான மீன்கள் பிடிக்கவும் பாதுகாப்பாக மீன் பிடியில் ஈடுபடவும் முடியும். இவற்றில் செவுள் வலை, நீள் தூண்டில், இழுவலை ஆகியன பயன்படுத்தப்படும். இரண்டு மாதங்கள் கடலில் நின்று மீன்பிடிக்க கூடிய60 அடி நீளமான பன்னாட் படகுகளும் (படம்-f) இப்போது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றன.

இயந்திரம் பொருத்தப்பட்ட இழுவைப்படகுகள் இயந்திர இழுவைப் படகுகள் அல்லது விசைப்படகுகள் என அழைக்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள உண்ணாட்டு நீர்நிலைகளில் இயந்திரமயப்படுத்தப்பட்ட மீன்பிடிச்சாதனங்களும் பயன்படுத்தப்படத் தடை செய்யப்பட்டுள்ளது. ஒலிமாசடைதல், நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதி மாசடைதல், எரிபொருள் காரணமாக மாசடைதல் ஆகிய காரணங்களிலும் நீர்த்தேக்கங்களிலுள்ள பழைய மரக்கட்டைகள், வேர்கள் ஆகியன கலன்களில் சிக்குதல் ஆகியன காரணமாக இவை தடைசெய்யப்பட்டுள்ளன.

### வலைகள்

மீன்பிடி வலை என்பது மீன் பிடிக்கப் பயன்படும் வலை ஆகும். மீன் வலை உறுதியான கயிறுகளால் முடிச்சிடப்பட்டு பின்னப்பட்டிருக்கும். தற்காலத்தில் நைலான் போன்ற ஒருவகை நெகிழியினால் செய்யப்பட்ட வலைகள் மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

1957 ஆம் ஆண்டில் முதன் முதல் இயந்திரமாக்கப்பட்ட படகுகளின் அறிமுகமும், செயற்கை இழைகளிலான நைலோன், குறுலோன், இலினன் போன்ற நூல்களினால் பின்னப்பட்ட வலைகளின் அறிமுகமும் மீன் உற்பத்திப் போக்கில் துரித வளர்ச்சியைக் காட்டியது. இன்று இலங்கையில் மீன்பிடி முறைகளை மூன்றாக வகுத்துக் கொள்ளலாம். அவை (1)பொறிகள் மற்றும் உபகரணங்கள் (2) தூண்டில்கள் (3) வலைகள் ஆகும்.

வலைகள் அவற்றால் பிடிக்கும் மீன் வகையைப் பொறுத்து பல வகைப் பெயர்களால் வட இலங்கை மீனவர்களால் அழைக்கப்படுகின்றன. வட இலங்கை மீனவர்களிடையே வீச்சு வலை, பாய்ச்சு வலை, சிறையா வலை,பெரு வலை, திருக்கை வலை, நெத்தோலி வலை, கீரி மீன் வலை, கொட்டு வலை, இறால் வலை, எனப் பல செவுள் வலைகள் உபயோகத்தில் உள்ளன. மீன் வகைகளைப் பொறுத்து இவ் வலைகளின் கண்ணளவுகள் வேறுபடுகின்றன. வலையின் கண்கள் ½ அங்குலத்திலிருந்து 7 அங்குலம் வரை அளவுடையன. திருக்கை வலை பெரிய கண்கள் உடையன.

வலைகள் மூலம் மீன்பிடித்தலில் மிதப்பு வலை, படுப்பு வலை போன்று பல்வேறு முறைகளில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அவை பற்றி இப்போது பார்ப்போம்.

ஆரம்ப காலத்தில் நைலோன் வலைகள் பருத்தி நூல்போன்று பலமானவையல்ல என்று மீனவர்களால் கருதப்பட்டது. மேலும் தலைமுறை தலைமுறையாக பருத்தி நூல் வலைகளையும் சணல் வலைகளையும் உபயோகித்த பின்பு தினமும் கடற்கரையில் வெயிலில் விரித்து விடுவதைப் போன்று நைலோன் வலைகளைச் செய்ய வேண்டியதில்லை.

(தொடரும்)



கண்ணாடி நாரிழைத் தோணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறி...

மரக்கறிகளின் விலைகள் இவ்வாறு மும்மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேவையான அளவு மரக்கறிகள் சந்தைக்கு கிடைக்காமையினால் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் மரக்கறிகளின் விலையானது மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-7)

## தீர்வைப் பெறு...

பெறவுள்ள பேச்சுவார்த்தை குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை தாம் பயன்படுத்திக் கொள்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கிடைத்துள்ள சந்தர்ப்பத்தினை நாம் பயன்படுத்தாது விட்டவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாகத் தாம் தயாரில்லை என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எட்டப்படுகின்ற அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட இணக்கப்பாடுகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விடயங்கள் மீண்டும் மீளப்பெற முடியாத வகையில் நிரந்தரமாக காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (4-7)

## அடுத்த...

என தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த ஆண்டு வாக்காளர் பட்டியலை திருத்தும் நோக்கில், கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரித்து வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

கோவிட் 19 தொற்றுபரவல் நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிப்பதை நிறுத்த கிராமசேவை அதிகாரிகள் தீர்மானித்திருந்தனர்.

எனினும் இம்முறை கிராம உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிராம அலுவலர்கள் வீடுகளுக்குச் செல்லும்போது பொதுமக்கள் வீட்டில் இல்லை என்றால், உடனடியாக கிராம அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் பதிவுப் பணி நிறைவு செய்யப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (4-7)

## மாகாண...

தவறான விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் யாப்பில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக பேசியிருக்கிறோம். அது தொடர்பில் நீண்டகாலமாக பல்வேறு விட யங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை உள்ளடக்குவதுடன், புதிய திருத்தங்களை சேர்ப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பான விடயங்கள் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்துள்ளோம். முழு ஆவணத்தையும் பார்ப்பதற்கு நேரம் போதவில்லை எனவே பிறிதொரு தினத்தில் அது தொடர்பாக ஆராய்வோம்.

ஜனாதிபதியுடனான எமது சந்திப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களே பேசப்படும் என சொல்லப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக ஏற்கெனவே நான்கு தடவைகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம்.

செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக எழுத்து வடிவிலும் அவருக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். வெறுமனே சட்டங்களை திருத்திவிட்டு மாகாண சபைகள் இயங்காமல் விட்டால் அதில் அர்த்தமில்லை என மேலும் தெரிவித்தார். (4-7)

## எரிபொருள்...

யில் எரிபொருள் வணிகத்தில் ஈடுபடும்.

அவற்றுக்கான எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பாக உயர்ந்தபட்ச மற்றும் குறைந்த பட்ச விலைகளை அமுலாக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்த இரண்டு விலைகளும் மாதாமாதம் அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்படும் எனவும், அந்த விலை இடைவித்தியாசத்துக்குள் குறித்த நிறுவனங்கள் தங்களது எரிபொருள் விலையை நிர்ணயித்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(4-7)

## திருமலையில்...

இதேவேளை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ந்தும் காணிகளை அபகரிக்க இடமளித்தால், அது இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான நல்லிணக்க விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தத்துக்கு பின்னர் காணி அபகரிப்பு பிரச்சினை குறிப்பாக, வடக்கில் பாரியளவில் இடம்பெற்று வருகிறது.

அதனால்தான் காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு தமிழ் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுக்க முறப்பட்டால் பாரிய அழிவு ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறார். இது பாரிய அச்சுறுத்தலாகும். இதனைச் சாதாரணமாகக் கருத முடியாது. அதேநேரம் இந்த அச்சுறுத்தலை விடுக்கும் சரத் வீரசேகரவே தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வை குழுவின் தலைவர் என்றும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

## ஜனாதிபதியின்...

விக்கும் விடயமாகும்.

ஜனாதிபதிக்கு மக்களாணை உண்டா? இல்லையா? என இவ்விடயத்தில் நாம் பார்க்க முடியாது. ஏனெனில் அவர் சட்டபூர்வமான ஜனாதிபதியாவார்.

மேலும் தற்போது அரசாங்கத்தை நிர்வகிப்பவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களாலேயே தற்போது ஜனாதிபதியின் அதிகாரங்கள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இவ்விவகாரத்தில் சட்டபூர்வமான ஜனாதிபதியின் ஆணைக்கு மதிப்பளிப்பது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தினார். (4-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1569
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 8 9 6 1 4 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1144
C 09 37 49 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9436

கொவிசெத
திகதி 2023.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 3356
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 20 30 42 59
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1462
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
U 21 06 09 11 19

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 423
சிம்மம் 02 07 08 38 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/14
சீட்டிழுப்பு இலக்கம் 5114
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 1 3 7 8 5 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2088
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.14
தினம் ஞாயிற்றுக்கிழமை
X 24 43 54 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,060,400/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.05.14
வெற்றி வாரம்:4249
வர்ணம்:இளஞ்சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.44,928,734.70
வெற்றி இலக்கங்கள்
02 39 49 68
ஆங்கில எழுத்து H
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 323
சீட்டிழுப்பு திகதி 2023.05.14
கபிலம்
வெற்றி இலக்கங்கள்
11 12 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,341,920/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,000,000/-
திகதி 2023-05-14
வெற்றி வாரம் 3800
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்
21 43 60 62
தனுசு
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 8,010,920/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 31 20 36 40 76
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1264
மஞ்சள்
2023.05.14
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 329,714,701.40
DLB
தொலைபேசி 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1914
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ 50,323,245/-
வெற்றி இலக்கங்கள்
29 33 70 71
ஆங்கில எழுத்து H
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பல்கலை. அபிவிருத்திக்கு ஆதரவளிக்க தயார் – ஜனாதிபதி ரணில்

- (கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகம் 10 ஆண்டு கால அபிவிருத்தித் திட்டத்தை முன் வைத்தால், அதற்கு அரசாங்கம் ஆதர வளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான பல்கலைக்கழக கட்டமைப்பிலும் நவீனமயப்படுத்தலின் தேவை இருப்பதாக ஜனா திபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச் சினைகளுக்கு வழங்கக்கூடிய உடன டித் தீர்வுகளை கண்டறியுமாறும் கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்திடம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

இந்த 10 வருடகால அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்குமாறு பழைய மாணவர்களிடம் மேலும் கோரிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு செய்யாவிட்டால் கொழும்பு பல்கலைக்கழகம் அந்த விசேட செய ற்பாட்டிற்கு பங்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் எனவும் தெரிவித்து ள்ளார். (4.7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15510)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15518)

## பத்திரிநாத், கேதார்நாத் யாத்திரை

நாட்கள் : 16 யாத்திரீகர்கள் : 10 பேர்

ஆரம்பம் : 10.06.2023

நிறைவு : 25.06.2023

பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவார், ரிஷிகேஸ், குருச்சேத்திரம் இவை அனைத்து ஆலயங்களையும் தவறாது தரிசிக்கலாம்.

விபரங்களை கேட்டறிந்து பதிவுசெய்க

சிரடி பாபா தரிசனம்

ஆரம்பம் : 19.05.2023 (14091)

ஸ்ரீரெங்கநாதன், மகன் ராஜன்

TP : 077 768 0102, 077 736 2154

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

## நுண்ணறிவு

ஆக்கம் : திரு. M. சுகந்தன் (B.A, Dip. in. Teaching, PGDE) மானிப்பாய் மகளிர் கல்லூரி.

1400 ற்கும் மேற்பட்ட வினாக்களின் தொகுப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி I வினாத்தாளின் முழுமையான பாடப்பரப்புக்களை உள்ளடக்கிய நுண்ணறிவு வினாக்களும், விளக்கமான விடைகளும் அடங்கியது.

Hotline : 0777220324 / 0776258778 (C-6548)

யுனிலங்காஸ் வெளியீடு - எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By: SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப் பூங்கா® இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி : 021 222 2567

(C-6547) (குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட்றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை. (C-6551)

077 649 1027


## மரண அறிவித்தல்



பிறப்பு 1940 . 02 . 28

இறப்பு 2023 . 05 . 14

## கந்தையா மகாதேவன்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (14.05.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா - கண்மணி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், இராஜகுலசேகரம் - கௌரிஅம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி கௌரிமனோகரியின் அன்புக் கணவரும், அருள்தேவன், லலிதாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயரூபனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.05.2023 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கௌரி இல்லம்"
நவாலி வடக்கு,
மானிப்பாய். (15458)

தகவல்: குடும்பத்தினர்


## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (15537)

077 544 8503

## சமையல் வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையலாட்கள் உடன்தேவை. (ஆண் / பெண்) தங்குமிடவசதி உண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (15517)

077 629 0894
072 629 0891

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-6550)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

எமது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-6550)

0777-068-777 v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.



- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).

076 911 9371, 076 739 0413, 077 874 8135 (15521)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.